# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 23 வியாழக்கிழமை 06.06.2024 கதிர் 223







## ஜனாதிபதித் தேர்தலைக் குறிவைத்து

# பல தரப்பினரையும் சந்தித்துப் பேச ஞாயிறன்று யாழ். வருகிறார் சஜித்



### பாடசாலைகளுக்கும் பொருட்களை அள்ளி வழங்குகின்றார்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவர் 13 ஆம் திகதி வியாழக்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று பல தரப்பினரையும் சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி தொகுதி பிரதம அமைப்பாளர் மரியதாஸ் மரியசீலன் தலைமையில் கிளி.பாரதி வித்தியாலயம், யாழ்ப்பாணம் தொகுதி பிரதம அமைப்பாளர் வெற்றிவேலு யஜேந்திரன் தலைமையில் யா.வைத்தீஸ்வரா கல்லூரி, நல்லூர் தொகுதி பிரதம அமைப்பாளர் அ. கிருபாகரன் தலைமையில் யா.சென். பெனடிக்ற் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை அவர் வழங்கி வைப்பார்.

எதிர்வரும் திங்கட்கிழமை பருத்தித்துறை மற்றும் உடுப்பிட்டி தொகுதிகளுக்கு விஜயம் செய்யும் எதிர்க்கட்சித் தலைவர், யா.கொட்டாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கி வைப்பார். அன்றைய தினம் காங்கேசன்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரன் தலைமையில் அளவெட்டி யா. அருணோதயாக் கல்லூரிக்கு 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறையை அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

2➤

## கொலையாளிக்கு மைத்திரிபால வழங்கிய பொது மன்னிப்பு அரசியலமைப்புக்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு!

### 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் உத்தரவு

ராஜகிரிய, ரோயல் பார்க் கொலைச் சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஜூட் ஷ்ரமந்த ஜயமஹவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பு வழங்கியமை அரசியலமைப்புக்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி, குறித்த குற்றவாளியை விடுவித்து முன்னாள் ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பு செல்லுபடியற்றது என உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மனுதாரருக்கு மைத்திரிபால சிறிசேன 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறியுள்ளதாகத் தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம், தற்போது வெளிநாட்டில் உள்ள பிரதிவாதியை உள்நாட்டு மற்றும் சர்வதேச சாசனங்களைப் பயன்படுத்தி இலங்கைக்கு அழைத்துவரத் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.



பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதியின் பொது மன்னிப்பானது, அரசியலமைப்பிற்கு எதிரானது மற்றும் செல்லுபடியற்றது எனத் தீர்ப்பு வழங்கக் கோரி பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான தீர்ப்பின் போது எஸ்.துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை அறிவித்துள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி ராஜகிரிய ரோயல் பார்க் சொகுசு

2➤

## உலகளாவிய 13 ஆவது பொருளாதார உச்சி மாநாட்டில் சிவஞானம் சிறீதரன்

தமிழ் தொழில்முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்களின் உலகளாவிய 13 ஆவது பொருளாதார உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுவிட்சர்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தமிழர்களின் எதிர்காலப் பொருளாதாரம் குறித்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் தமிழ் தொழில்முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்களின் உலகளாவிய 13 ஆவது பொருளாதார உச்சி மாநாடு சுவிட்சர்லாந்து நாட்டில் டாவோஸ் நகரில் நடைபெறவுள்ளது.

இந்த உச்சி மாநாடு நாளை 7 ஆம் திகதி தொடக்கம் நாளைமறுதினம் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உலகத்தின் 40 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 600 இற்கும் மேற்பட்ட தமிழ் தொழிலதிபர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.



இந்த மாநாடு பற்றி தெளிவூட்டும் ஆரம்பக் கூட்டம் கடந்த முதலாம் திகதி சுவிஸ்நாட்டில் ஒல்டன் நட்சத்திர விடுதியில் தமிழ் தொழில்முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்களின் சுவிட்சர்லாந்துக்கான ஒருங்கிணைப்பாளரும் தலைவருமான கலாநிதி சிறி இராசமாணிக்கம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்த முன்னோடிக் கூட்டத்தில் ஐரோப்பிய சுவிஸ்நாட்டு தொழில்முனைவோர்களும், பல புத்திஜீவிகளும்,

2➤

## உ—தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீள் கணிப்புச் செய்ய ஜூன் 19 க்கு முன்னர் ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்!

2023 (2024) ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை மீள்கணிப்பு செய்ய விரும்புவோர், ஜூன் 19 ஆம் திகதி வரை ஒன்லைன் மூலம் அதற்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு பரீட்சைகள் திணைக்களம் கோரியுள்ளது.

பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது, பரீட்சார்த்திகள் தமக்கென பயனர் கணக்கொன்றை வைத்திருந்தால், கணினியில் (உ-தர) 2023 (2024) பரீட்சைக்கு தோற்றிய அதே பரீட்சை எண்ணையும் தேசிய அடையாள அட்டை எண்ணையும் பயன்படுத்த வேண்டும்.

பயனர் கணக்கு இல்லையென்றால், தேசிய அடையாள எண் மற்றும் தொலைபேசி எண்ணை உள்ளிட்டுப் பதிவு செய்ய வேண்டும்.

ஒரு பாடத்திற்கு மறு ஆய்வுக் கட்டணம் ரூபா 250 ஆகும். கிரெடிட் கார்ட் அல்லது டெபிட் கார்ட் அல்லது தபால் அலுவலகங்கள் மூலம் பணத்தைச் செலுத்தலாம். பணத்தைச் செலுத்திய பின்னர், விண்ணப்பப் படிவத்தை பிடிஎப் வடிவத்தில் பதிவிறக்கம் செய்து, அதனைக் கைவசம் வைத்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை

2➤

## சைகை மொழி சட்டப்பூர்வமாக நிறுவப்படாததால் மாற்றுத்திறனாளிப் பிள்ளைகள் பெரிதும் பாதிப்பு!

### சட்டத் திருத்தம் இல்லாமையே காரணம் என்கிறார் டலஸ் எம்.பி.



பல தசாப்தங்களாக பாடசாலைக் கல்வியில் ஆசிரியர் சைகை மொழி ஒழுங்கமைக்கப்படாமையால் விசேட தேவையுடைய சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மேற்படி சைகை மொழி ஒழுங்கமைப்பிற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவி கிடைத்துள்ள போதிலும், அது உரியவாறு ஒழுங்கமைக்கப்படாமையின் காரணமாக விசேட தேவையுடைய பாடசாலை மாணவர்களுக்கு கல்வி வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அழகப்பெரும குற்றம் சாட்டினார்.

விசேட தேவையுடைய

2➤

# ஆட்டத்தை ஆரம்பித்தார் ரணில்

## தனது அரசியல் அலுவலகத்தை திறந்து வைத்தார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் தனது அரசியல் அலுவலகத்தை இன்று சுப நேரத்தில் திறந்து வைத்தார்.

புதிய அலுவலகம், கொழும்பு சேர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

நாரஹேன்பிட்டி அபயாராமாதிபதி, மேல் மாகாண பிரதம சங்கநாயக்க, கொழும்பு பல்கலைக்கழக வேந்தர் வண. கலாநிதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர், கொள்ளுப்பிட்டி வாழுகாராம மகா விகாரை உட்பட ஐந்து மகா விகாரைகளின் விகாராதிபதி, ஊவா பிராந்திய பிரதம சங்கநாயக வண. மஹரகம நந்த நாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் இதன்போது பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கியதுடன் ஏனைய சமயத் தலைவர்களும் சமய வழிபாடுகளை நடத்தி ஆசிர்வாதங்களை வழங்கினர்.

ஜனாதிபதியின் அரசியல் அலுவலகத்தை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் களமிறங்குவாரா, இல்லையா என்ற கேள்வி பலர் மத்தியிலும் உள்ளது. இந்நிலையிலேயே, தேர்தலில் களமிறங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதியால் அரசியல் அலுவலகம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### சைகை மொழி சட்டப்பூர்வமாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளுக்கென தனியாக 3 அரசாங்கப் பாடசாலைகளும், 27 உதவி பெறும் பாட சாலைகளும் உள்ளதாகவும், அந்த 30 பாடசாலைகளில் மொத்தமாக 2,135 பிள்ளைகள் கல்வி கற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், 879 சிறப்புப் பிரிவுகளை கொண்ட பாடசாலைகளில் மொத்தம் 9,409 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்ற போதிலும், இது விடயமாக உரிய நேரத்தில் சட்டத் திருத்தம் செய்யப்படாததால், இந்தப் பிள்ளைகள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

கடந்த 2012ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி, பாடசாலை செல்லும் வயதுடைய மாற்றுத்திறனாளிகளில் முப்பத்தி நான்கு சதவீதத்தினர் அடிப்படைக் கல்வியைக் கூடப் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பிள்ளைகககளின் விவகாரத்தில் கடந்த காலங்களில் ஆட்சி புரிந்த சகல அரசாங்கங்களையும் போலவே தானும் குற்றவாளிக் கூண்டில் இருப்பதாகவும், உதவி பெறும் பாடசாலைகளை நிர்வகிக்கும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது தொடர்பான கலந்துரையாடல் நாடாளுமன்றக் குழுக்களின் கூட்டத்தில் நடைபெறவுள்ளதாகவும் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். (ரென-16

### உ-தரப் பரீட்சைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பியதும் தொலைபேசி எண்ணுக்கு எஸ்எம்எஸ் தகவல் வரும்.

மேலதிக விபரங்களுக்கு பரீட்சைத் திணைக்கள இலக்கங்களான 011-2785231, 0112785216, 0112784037 அல்லது 1911 அவசர தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம். (ரென-15)

### உலகளாவிய 13 ஆவது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்வலர்களும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியுள்ளனர்.

தமிழர்களின் டாவோஸ் பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கையில் இருந்து 35 இற்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் கலந்துகொள்கின்றனர்.

அத்துடன் இந்த மாநாட்டின் நிறைவு நாளில் இலங்கையில் இருந்து சுவிட்சர்லாந்துகுத்த தமிழர்கள் இடம்பெயர்ந்த 40 ஆண்டுகளை நினைவுகூரும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இந்த மாநாட்டில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### கொலையாளிக்கு மைத்திரிபால .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியிருப்புத் தொகுதியின் படிக்கட்டுக்களில் வைத்து, குற்றவாளியான ஜூட் ஜூட் ஷ்ரமந்த அன்ரனி ஜயமஹ, தனது காதலியின் சகோதரியான 19 வயதுடைய இவோன் ஜொன்சன் எனும் யுவதியை அவர் அணிந்திருந்த காற்சட்டையைக் கொண்டு கழுத்தை நெரித்தும், தலையை தரையில் அடித்து மண்டை ஓட்டை 64 இடங்களில் சேதப்படுத்தியும் கொடூரமாகக் கொலை செய்துள்ளமை நிரூபிக்கப்பட்டிருந்தது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஸ்ரீமந்த என்டனி ஜயமஹவுக்கு 2016 ஆம் அண்டு ஜனாதிபதி மன்னிப்பின் கீழ், அந்தத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது. இதனையடுத்து 2019 நவம்பர் 9 இல் அவருக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து முன்னாள் ஜனாதிபதி ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், குறித்த குற்றவாளியை விடுவிக்க தான் பணம் பெற்றதாகக் கூறப்படுவதை மறுத்திருந்தார்.

எனினும் அவருக்கு மன்னிப்பளிக்க, அவரது குடும்பத்தாரைத் தன்னிடம் அழைத்து வந்து தொடர்ச்சியாகக் கோரிக்கை அளித்தவர் ரத்ன தேரர் என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்ததுடன், குற்றவாளியின் குடும்பத்தினரிடமிருந்து பிறிதொரு தரப்பு பணம் பெற்றுள்ளதாகவும் கூறினார்.

இதனையடுத்து, தனது பெயரையும் தொடர்புபடுத்தி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துக் குறித்து ரத்ன தேரர் முறைப்பாடு அளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (04)

### பல தரப்பினரையும் சந்தித்துப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் செவ்வாய்கிழமை எதிர்க்கட்சித் தலைவர், ஊர்காவற்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் குருபரன் மதன்ராஜ் தலைமையில் யா.நெடுந்தீவு மகாவித்தியாலம், மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் அனோஜன் அருந்தவநாதன் தமையில் யா.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, யாஃபுனித. ஹென்றியரசர் கல்லூரி இளவாலை ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கி வைப்பார்.

எதிர்வரும் புதன்கிழமை கோப்பாய் தொகுதிக்கு விஜயம் செய்யும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, யா.அத்தியார் இந்துக் கல்லூரிக்கு 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறையை அன்பளிப்பு செய்யவுள்ளார்.

தொடர்ந்து வட்டுக்கோட்டை தொகுதி பிரதம அமைப்பாளர் சதாசிவன் தலைமையில் யா.யாழ்ற்றன் கல்லூரி காரைநகர் பாடசாலைக்கு 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறையை அன்பளிப்பு செய்யவுள்ளார்.

மேலும், யா.சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கு விஜயம் செய்யும் எதிர்க்கட்சித் தலைவர், பஸ் ஒன்றை அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

எதிர்வரும் வியாழக்கிழமை சாவகச்சேரி தொகுதி பிரதம அமைப்பாளர் கந்தையா மயில்வாகனம் தலைமையில் யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கிளிநொச்சித் தொகுதி அமைப்பாளர் மொகமட் காசிம் தலைமையில் கிளி.இரணைதீவு றோ.க.த. க. ஆகிய பாடசாலைகளுக்கு தலா 11 இலட்சம் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கி வைப்பார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன மற்றும் கட்சியின் பிரதிச் செயலாளர் உமாசந்திரா பிரகாஷ் ஆகியோருடன் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பல சமூக, அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது விஜயத்தின்போது, அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரைச் சந்திக்கவுள்ளார். (அ)







உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நல்லூர் பெருந்திருவிழா பத்திரிகை யாழ் மாநகரசபையிடம் கையளிப்பு



வரலாற்றுப்பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில் ஆலயத்துக்கு வெளிச்சுற்றாடல் செயற்பாடுகளை காத்திரமாக முன்னேடுக்கும் யாழ் மாநகரசபைக்கு இன்று காலை 10 மணியளவில் மகோற்சவப் பத்திரிகையும் காளாஞ்சியும் தேவஸ்தானத்தால் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வையோட்டி யாழ் மாநகரசபை வாழை, தோரணங்களால் அலங்கரிக்கபட்டிருந்தது.

# பாடசாலை மாணவிகளுக்கான வவுச்சர் வழங்கும் நடவடிக்கை



பாடசாலை மாணவிகளுக்கான சுகாதாரத் துவாய்களைப் பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர் வழங்கும் நடவடிக்கை இன்று நாடு பூராகவும் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி தெற்கு வலயத்திற்கான நிகழ்வு, பன்னாங்கண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் வலயக்கல்விப்பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா கலந்து கொண்டு குறித்த வவுச்சர்களைக் கையளித்திருந்தார். (02)

# சம்மாந்துறையில் சர்வதேச சுற்றாடல் தினம் அனுட்டிப்பு



(சர்ஜுன் லாபீர்)

உலக சுற்றாடல் தினத்தினை அனுட்டிக்கும் முகமாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.

அந்த வகையில் கடந்த வாரம் முழுவதுமாக 51 கிராம சேவகர்கள் பிரிவிலும் சிரமதான நிகழ்வுகள் இடம்பெற்றதோடு நேற்று (05) சம்மாந்துறை பிரதேசத்துக்குட்பட்ட கமு.சது.கோரக்கர் தமிழ் வித்தியாலயத்தில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனிபா தலைமையில் மரக்கன்றுகள் நடப்பட்டன. அந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், வெளிக்கள பிரிவு பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.நிசாம், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எல்.சாஜிதா, ஏ.கே.எப் சாமிலா, அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.டி.எப்.சம்ஸத் பேகம், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் இர்பான் மௌலான மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன் பின்னர் மாலையில் இரண்டாம் கட்ட நிகழ்வாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்மந்தமாக விழிப்புணர்வுச் செயலமர்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் குறோசியா கடாபியினால் சுற்றுச்சூழல் செயற்பாடு மற்றும் பாதுகாப்பு சம்மந்தமாக தெளிவூட்டப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி தங்க வர்ணப் பதக்க சுற்றாடல் முன்னோடி மாணவர்களை கௌரவத்து பரிசில்களும் வழங்கப்பட்டதோடு, பசுமை சுற்றுச்சூழல் பேரவையுடாக சுற்றாடல் விழிப்புணர்வை ஏற்படுத்திய மின்மினி மின்ஹா என்ற மாணவி விசேடமாக பிரதேச செயலாளரினால் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சூழல் பாதுகாப்புக்காக மரநடுகைத்திட்டம் கல்முனைப் பொலிஸாரினால் முன்னெடுப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கல்முனை பொலிஸ் நிலையம் ஒழுங்கு செய்திருந்த சூழல் பாதுகாப்புக்கான மரநடுகை வேலைத்திட்டம் இன்று கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் ஆலோசனைக்கு அமைவாக பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸியின் நெறிப்படுத்தலில் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரம்ஸீன் பக்கீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

அத்துடன் கல்முனை பொலிஸ் நிலையத்தின் சமூக பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி - பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ. வாஹித், சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி - பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.ஐ. றபீக், கல்முனை மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜுன், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம் உட்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது மாநகர சபை வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகள் பல நடப்பட்டன.

இதேபோல் கல்முனை பிரதேச செயலகத்திலும் கல்முனை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் மரக்கன்றுகள் நடப்பட்டன என்று பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ. வாஹித் தெரிவித்தார்.




# அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவில் சகவாழ்வு சங்க ஆரம்பம்!



(எம்.எம்.றம்ஸீன்)

நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவினால் கிராமங்கள் தோறும் சகவாழ்வுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ.ரீ.எம்.இர்பானின் வழிகாட்டலில் உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிர் (சட்டத்தரணி) தலைமையில், தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.றிஸானின் நெறிப்படுத்தலில் அட்டாளைச்சேனை - 13ஆம் பிரிவுக்கான சகவாழ்வுச்சங்க ஆரம்ப நிகழ்வும் நிருவாகத் தெரிவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை - 13 கிராமசேவகர் யூ.எல்..சம்சுதீன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆஷிகா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெசிமா, வெளிக்கள உத்தியோகத்தர்களான ஜெஸீலா நஸ்ரின், ஏ.எம்.ஹஸ்பியா வீவி, உளவளத் துணை உதவியாளர் றனீஸ், மகளிர் அபிவிருத்தி கள உதவியாளர் பர்ஹானா மற்றும் பொதுமக்கள் போன்றோர் பங்கேற்றனர்.

எதிர்காலத்தில் 32 கிராம சேவகர் பிரிவுகளையும் ஒன்றிணைத்து பிரதேச சகவாழ்வு சங்கம் உருவாக்கப்பட உள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# எனது ஆட்சியில் இனவாதம், மதவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளியேன்!

## தமிழருக்குத் தீர்வு உறுதி என்று சஜித் அறிவிப்பு

எனது ஆட்சியில் இனவாதம், மதவாதம் என்ற ரீதியில் நாட்டில் பிரச்சினைகள் மீண்டும் ஏற்பட இட மளிக்கமாட்டேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேம தாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு வெற்றி வாய்ப்பு அதிகம். சிங்கள மக்கள் மாத்திரமின்றி பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்களும் எனக்கான ஆணையை வழங்குவார்கள்.

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் தற்போ தைய நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவேன்.

தேர்தல் மூலம் புதிய நாடாளுமன்றம் அமையும். ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியே ஆட்சியமைக்கும்.

புதிய அரசமைப்பைக் கொண்டு வந்து இலங்கை யின் இறையாண்மையைப் பாதிக்காத வகையில் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்க நான் தயாராக இருக்கின்றேன்.

இதற்குப் புதிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக் கும் ஆளும் - எதிரணி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கு வார்கள் என நம்புகின்றேன்.

எமது அரசில் இனவாதம், மதவாதம் என்ற ரீதியில் நாட்டில் பிரச்சினைகள் மீண்டும் ஏற்பட இடமளிக்க மாட்டேன்

கடந்த காலங்களில் இனவாதத்தாலும் மதவாதத்தா லும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டார்கள். அந்த நிலைமை இனியும் வேண்டாம். அனைவரும் ஒரே நாட்டு மக்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்" - என்றார். (அ)



# பாரதப் பிரதமருக்கு சிறீதரன் எம்.பி வாழ்த்து



நடைபெற்று முடிந்த இந்திய நாடாளுமன்றதுக்கான 18வது மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றதற்க மைய, தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் பாரத தேசத்தின் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீ தரன் வாழ்த்துரைத்துள்ளார்.

இதுதொடர்பிலான அவரது ஊடக அறிக்கையில்,

தாங்கள் இந்திய மக்களின் மன உணர்வுகளை வென்றிருப்பதன் பிரதிபலிப்பாகவே மக்களவைத் தேர்தலில் பெற்றிருக்கும் இந்த வெற்றி அமைந்திருக்கி றது. பாரதத்தின் அரசியல், பொருளாதார, சமூக நலன் சார்ந்து தாங்கள் ஆற்றவிருக்கும் பணிகளின் விளிம் பில், ஈழத் தமிழர்களுக்கும் இந்திய தேசத்துக்கும் இடையே இழையோடியிருக்கும் உறவின் கனதியை உயிர்ப்பிக்க வேண்டிய காலக்கடமையும் தங்களிடத்தே தரப்பட்டிருப்பதாக நாம் உணருகிறோம்.

இலங்கைத் தீவில், ஈழத் தமிழ்மக்களுக்கென அர்த்தமுள்ளதும் அடிபணியாததுமான சமஸ்டி முறை யிலான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதில் இந்தியாவே பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டும் என்பதே எமது இனத்தின் நீண்டகால எதிர்பார்ப்பாகும். அந்தவகையில் தங்களது அனுசரணையும் அழுத்தமும் இன்றி இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் தமக்குரித்தான உரிமைகளுடன் வாழும் வாய்ப்பைப் பெறமுடியா தென்பதை நாம் திடமாக நம்புகிறோம்.

போருக்குப் பின்னரும் இன, மத அடக்குமுறை ளுக்கு ஆளாகியிருக்கும் எமது மக்களின் ஆட்சி உரிமை மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக, எமது கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த்தேசியத் தரப்புகளால் முன்னெடுக்கப்படும் முயற்சி களில், இந்திய மத்திய அரசு தனது முதன்மையான பணிகளை ஆற்ற முன்வரவேண்டுமென்ற எதிர்-பார்ப்பை எமது இனத்தின் கோரிக்கையாக தங்களிடம் முன்வைக்கிறேன்.

இந்திய தேசத்தின் வரலாற்றுப் பக்கங்களில் தனித் துவம் மிக்க தலைவராக, தொடர்ந்து மூன்றாவது முறை யாகவும் மக்கள் ஆணைபெற்று, பாரதப் பிரதமராக ஆட்சிபீடம் ஏறியிருக்கும் தங்களின் பணிகள், இந்திய மற்றும் ஈழ தேசங்களின் நலனுக்கான வரலாற்றுப் பணிகளாய் அமைய வாழ்த்தி நிற்கிறேன்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

# மின்சாரக் கட்டணங்கள் ஜூலை முதல் குறைப்பு

## நாடாளுமன்றில் அமைச்சர் அறிவிப்பு




மின்சாரக் கட்ட ணத்தை ஜூலை முத லாம்திகதிமுதல்குறைக் கவுள்ளதாக விடயத் துக்குப் பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வீட்டு பாவனைக்கான கட்டணத்தில் அதிக சலுகை வழங்கப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதற்கான பரிந்துரைகள் அடங்கிய ஆவணம், இலங்கை மின்சார சபையால் நாளை பொதுப் பயன்பாடு கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என் றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி, 0 - 30 இற்கு உட்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 8 ரூபாவில் இருந்து 6 ரூபாவாகவும், 30 - 60 அலகுகளுக்கு இடைப்பட்ட அலகு ஒன்றின் கட்ட ணம் 20 ரூபாவிலிருந்து 9 ரூபாவாகவும், 60 - 90 இற்கு இடைப்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 30 ரூபாவிலிருந்து 18 ரூபாவாகவும், 90 -180 அலகுக்கு உட்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 50 ரூபாவிலிருந்து 30 ரூபாவாகவும் குறைக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# தனியார் பேருந்தை மோதிய அரச பேருந்து கிளிநொச்சி கரந்தாய் பகுதியில் சம்பவம்!

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரந்தாய் பகுதியில் நிறுத் தப்பட்டிருந்த தனியார் பேருந்தை பின்னால் வந்த அரச பேருந்து மோதித் தள்ளியுள் ளது.

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரந்தாய் பகுதியில் இன்று காலை 10 மணியளவில், கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக் கிச்சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து, பயணிகளை ஏற்றுவதற்காகத் தரிப்பிடத் தில் நின்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த அரச பேருந்து மோதியுள்ளது.

குறித்த மோதலானது திட்டமிட்டு இடம் பெற்றுள்ளதாக பயணிகளால் தெரிவிக்கப் படுகிறது.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி அரச பேருந்தும் தனியார் பேருந்தும் ஒரு சில நிமிட வித்தியாசத்தில் புறப்பட்டு வருவதால் இரு தரப்புக்கும் இடையில் அடிக் கடி முறுகல் ஏற்படுவதாகவும் இதனால், வீதியில் போட்டியிட்டுச் செல்வதாகவும் பொதுமக்களால் குற்றஞ்சாட்டப்படுகிறது.

குறித்த போட்டியின் காரணமாகவே திட்ட மிட்டு, தனியார் பேருந்தை அரச பேருந்து மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து இடம்பெற்ற இடத்தில் இரு பேருந்துகளினதும் உடைந்த கண்ணா டித் துண்டுகள் வீதியில் கிடந்ததாகவும், பாடசாலை மாணவர்கள் அதிகம் வரும் இடம் அது என்பதனால் துப்பரவு செய்து செல்லுமாறு கரந்தாய் கிராம மக்களால் தெரிவிக்கப்பட்ட போது, அரச பேருந்து உத்தியோகத்தர் ஒருவர் தரக்குறைவாக மக்களுக்குப் பதிலளித்ததோடு, தம்மால் அதனைச் செய்ய முடியாது எனவும் தெரி வித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நீண்ட நேர வாக்குவாதத்தின் பின்னர், வீதியில் கிடந்த கண்ணாடித் துண்டுகள் அகற்றப்பட்டுள்ளன எனவும், விபத்தில் காயமடைந்தவர்கள் பளை வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (02)



# உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்!



(எம்.எம்.றம்ஸீன்)

பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரியில் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு-களைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் பி. முஹாஜரின் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

இம்முறை 11 மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றி அனைத்து மாணவிகளும் சித்தி பெற்றுள்ளனர். சென்ற வருடமும் இவ்வாறு நூறு வீத சித்தியை இப்பாடசாலை பெற்றிருந்ததமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இம்முறை 7 மாணவிகள் பல்கலைக்-கழகத்திற்கு தெரிவாகின்ற சந்தர்ப்பத்தை பெறுவர் என எதிர்பார்க்கப்படுவதாக அதிபர் தெரிவித்தார்.

# அனர்த்த ஆபத்து நிலைமைகளை முகாமை செய்தல் பாடசாலைகளுக்கான வழிகாட்டல் செயலமர்வு



(எம்.எம்.ஜெஸ்மின்)

அனர்த்த ஆபத்து நிலமைகளை முகாமை செய்வதற்கான பாடசாலைகளின் பாதுகாப்பு தொடர்பிலான வழிகாட்டல் செயலமர்வு, கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தில் நடாத்தப்பட்டது.

இச்செயலமர்வில் பிரதான வளவாளராக மாகாண பிரதிக் கல்வி பணிப்பாளர் சஹீல் கலந்து கொண்டார். வலயக்கல்வி அலுவலகத்தின் சேவைக்கால ஆசி ரிய ஆலோசகர் எம்.எச்.ஹம்மாத் இதனை ஒழுங்கு செய் திருந்தார். அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் உள்ள மூன்று கோட்டப் பாடசாலைகளிலும் இருந்து 50க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்தச் செயலமவர்வில் கலந்து கொண்டனர்.






# வடமேல் மாகாணத்தில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சக்கு தோற்றிய மாணவர்களுக்கு உயர்தர வகுப்புகள் ஆரம்பம்

(எம்.எம்.ஜெஸ்மின்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவின் பிரகாரம், கல்வி அமைச்சின் கொள்கைத் தீர்மானத்துக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படும் 2023ம் ஆண்டின் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக் குத் தோற்றிய மாணவர்களை நேரடியாக உயர்தர வகுப்புகளில் இணைத்துக் கொள்ளும் தேசிய நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அதற்கு சமாந்தரமாக க.பொ.த.சாதாரண தர பரீட் சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வடமேல் மாகாண நிகழ்வு, ஆளுனர் நஸீர் அஹமட் தலை மையில் குருநாகல் கல்வி வலயத்துக்குட்பட்ட உடப-தலவ சுதர்சன மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மாகாண முதலமைச்சரும், மாகாண கல்வி அமைச்சும் ஒன்றிணைந்து குறித்த நிகழ்வை ஏற் பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் மாகாண முதலமைச்சு, மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் நயனா காரியவசம், மாகாண கல்விப் பணிப்பாளர் முதிதா ஜயதிலக, குருநாகல் மாவட்ட கல்விப் பணிப்பாளர் புஷ்பமாலா ஜயமஹ, வடமேல் மாகாண மேலதிக கல்விப் பணிப் பாளர் துமிந்தா வேதண்ட, பிரதான அமைச்சின் பிர திப் பணிப்பாளர் ரசிகா அலவத்தே உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடி அல்-ஹிறா மகாவித்தியாலயத்தில் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் 100 வீத சித்தி!



(எம்.எம்.ஜெஸ்மின்)

காத்தான்குடி அல்-ஹிறா மகா வித்தியாலயத் தில் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் 9 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி 9 மாணவர்களுமே பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

காத்தான்குடி அல்-ஹிறா மகா வித்தியாலயத்தில் இம்முறை க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவில் முதலாம் அமர்வில் 9 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 9 பேரும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

இதில் 5 மாணவர்கள் 3ஏ சித்தியைப் பெற்று மருத் துவத் துறைக்கும் 4 மாணவர்கள் விஞ்ஞானப் பிரி வில் ஏனைய துறைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ள னர்.

குறிப்பாக விஞ்ஞான துறையில் இப்பாடசாலை 100 வீத சித்தியைப் பெற்றுள்ளதோடு, அனைவரும் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு விவசாய அமைச்சினால் சிரமதானம்




சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவின் ஏற்பாட்டில் இன்று வியாழக் கிழமை சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூவின் தலைமையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அவரது ஆரம்ப உரையோடு முன்னெடுக்கப்பட்ட சிரதமானப் பணியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு உத்தியோகத்தர்கள் பலாலி வீதியில் கோண்டாவில் சந்தி முதல் திருநெல்வேலி சந்தி வரை யான பிரதேசத்தில் உக்காத கழிவுப் பொருட்களை அகற்றுதலை மேற்கொண்டனர்.

நல்லூர் பிரதேச சபையானது குறித்த வேலைத்திட்டத்திற்கு கழி வகற்றல் வாகன வசதியினை வழங்கியிருந்தது.

## விமானசேவைப் பிரதிநிதிகளின் இலங்கைச் சங்கம் புதிய நிர்வாகக் குழு தெரிவுசெய்யப்பட்டது




விமானசேவைப் பிரதிநிதிகளின் இலங்கைச் சங்கத்தின் (SLAAR) 2024 - 2025 காலப்பகுதிக் கான புதிய நிர்வாகக் குழு தெரிவுசெய்யப்பட்டுள் ளது.

புதிய தலைவராக துமிந்து அமரதுங்கவும், துணைத்தலைவராக சுதேஷினி ஜெயவர்தனவும், செயலாளராக சந்துஷ் உடுமலகலவும் தெரிவாகி யுள்ளனர்.

விமானசேவைப் பிரதிநிதிகளின் இலங்கைச் சங்கம் 1993 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் திகதி உருவாக்கப்பட்டது.

இது (நேரடியற்ற) விமான சேவையில் ஈடுபடு கின்ற நிறுவனங்களுக்கு அவர்களின் சிரமங் களை வெளிப்படுத்துவதற்கும், பொதுவான தீர்வு களைத் தேடுவதற்கும் அவர்களின் அன்றாட நடவ டிக்கைகள் தொடர்பான விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்கும் ஒரு வாய்ப்பை வழங்குவதை முதன்மை இலக்காகக் கொண்டது.

உறுப்பினர்களின் நலன்கள் மற்றும் பயணத் துறையின் நலன்களைப் பாதுகாக்கும் ஒரு துடிப் பான சங்கம் என்ற நற்பெயரை இச்சங்கம் பெற் றுள்ளது. (04)

## மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச மருத்துவ முகாம்



(ஹஸ்பர் ஏ.எச்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள உடல் ரீதியாக பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் ஒன்று இன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டு தலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த மருத்துவ முகாமாமை, கப்பல் துறை ஆயுர்வேத தளவைத்தியசாலையுடன் இணைந்து தம்பல காமம் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

மருதம் மாற்றுத் திறனாளிகள் சங்கம் மற்றும் எகமுத்து ஆகிய மாற்றுத் திறனாளிகள் சங்கத்தை சேர்ந்த உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இதில் கலந்து கொண்டனர்.

இதில் பல வைத்திய ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் வைத்திய சேவைகளும் இடம் பெற்றன.

கப்பல் துறை ஆயுர்வேத தளவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.ஏ.அனஸ்டீன், வைத்தியர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.






# சிறுபான்மை நலன் ஆணைக்குழு நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டும்!

## நாடாளுமன்றில் ஹரீஸ் எம்.பி. கோரிக்கை



(நூருல் ஹுதா உமர்)

கல்விசார் நியமனங்களிலும், கல்வி அதிகாரிகள் நியமனங்களிலும் பல பாரபட்சங்கள் நடைபெறுவதாக அறி-கி றோம். இது போன்று பல இடங்களிலும் பல்வேறு அசௌகரியங்கள், பாரபட்சங்கள் நடைபெறுகிறது.

எமது நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அவற்றை மேன்முறையீடு செய்யவும், விரைவான தீர்வுகளை பெறவும் "சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு" ஒன்றை நிறுவ அரசியலமைப்பு ரீதியாக ஏற்பாட்டை செய்ய வேண்டும் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் சபையில் கேட்டுக்கொண்டார்.

நேற்று (5) நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரை நிகழ்த்திய அவர், இப்படியான ஏற்பாடுகள் இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருக்கின்றன. எமது நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் நலன் கருதி "சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு" ஒன்றை நிறுவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும், மிக நீண்ட கால கோரிக்கையாக இருந்து வரும் பொத்துவிலுக்கான தனியான கல்வி வலயத்தை உருவாக்கித் தருமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரவை அனுமதியுடன் மாகாண சபைகளினூடாக ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்து வரும் கல்வி அமைச்,சு கிழக்கு மாகாணத்தில் கஷ்டப்பிரதேசங்களில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய அண்மையில் கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருந்ததும் துரதிஷ்டவசமாக அந்த நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கூடுதலான ஆசிரியர்களை கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நியமிக்க விரைவாக நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!